<u>இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்</u>

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 267/2024

**ம.சா. 1**

**திருமரி. கலைமணி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து என் மூத்த மகன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். விபத்தை நான் நேரில் பார்க்காமல் கார் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் கவனக்குறைவாக சாலையை குறுக்காக கடந்ததால் தான் விபத்து நடந்தது என்றும், 1ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு காரணம் அல்ல என்றால் சரியல்ல. என் கணவர் என்ன வேலை செய்து வந்தார் என்றால் அரசு போக்குவரத்து கழகத்தில் நேரக்காப்பாளராக பணியாற்றி வந்தார். என் கணவருக்கு தினக்கூலி அடிப்படையில் சம்பளம் என்றால் சரியல்ல மாதம் ரூ.25 ஆயிரம் சம்பளம். அவருக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் வேலை என்றால் சரியல்ல 6 நாட்கள் வேலை. என் மகன் கொடுத்த புகாரில் அவரது அப்பா ஒருநாள்விட்டு ஒருநாள் தினக்கூலி அடிப்படையில் கோபி அரசு போக்குவரத்து கழகத்தில் நேரக்காப்பாளராக பணியாற்றி வருவதாக சொல்லியுள்ளார் என்றால்

அவ்வாறு தான் சொல்லியுள்ளார். என் கணவர் என்ன வேலை செய்தார், எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்று காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் குழந்தைகளுக்கு திருமணமாகிவிட்டதா என்றால் இல்லை படித்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அனைவரும் இறந்துபோனவரின் வருமானத்தை சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு என்ன வயது என்றால் 60 வயது. என்னுடைய கணவருக்கு வயது 60 க்கும் அதிகமாக இருக்கும் என்றும், எனவே இழப்பீடு அதிகமாக பெறுவதற்காக அவரது வயதை குறைத்துச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாததால் பாலிசி விதிமுறைமீறல் ஏற்பட்டதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.